**O.S. No. 465 /2023**

**Date:18.03 .2026**

**வா.சா.1 முருகன்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கும், பிரதிவாதிகளுக்கும் துரைச்சாமியாபுரம் பஞ்சாயத்து என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து துரைச்சாமியாபுரம் பஞ்சாயத்துக்குட்பட்டுதான் உள்ளது என்றால் சரிதான். பிராதின் தபசில் விவரம் எனக்கு தெரியும். பிராது தபசில் சொத்து இறந்து போன குருசாமி தேவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என கிரைய ஒப்பந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குருசாமி தேவர் உயிருடன் இல்லை என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் இறந்துபோன குருசாமி தேவரின் மனைவி மற்றும் மகள் ஆவார்கள். மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் 3, 4 பிரதிவாதிகள் கையெழுத்து செய்யவில்லை என்றாலும், அதைக்குறித்து பணம் வாங்கவில்லை என்றாலும் சரிதான். மேற்படி தாவா சொத்து குருசாமி தேவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதற்கான உரிமை ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்துக்களுக்கு வருவாய் ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் தபசில் சொத்து குருசாமி தேவருக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து குருசாமி தேவரின் முதல் மனைவி குருவம்மாளுக்கு 1972ம் ஆண்டு பதிவு நன்கொடை ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி குருவம்மாள் 1979ம் ஆண்டு தனது மகன் செண்பகராஜ் என்பவருக்கு பதிவு நன்கொடை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. பிராது தபசில் சொத்திற்கு வில்லங்க சான்று ஏதும் நான் தாக்கல் செய்தேனா என்றால் சரிதான். பிராது தபசில்சொத்தைப் பொருத்து கிரையம் கேட்கும்போது குருசாமி தேவரும், அவரது மகன்களும், தங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என தன்னிடம் தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தைப் பொருத்து விவரம் தனக்கு தெரியும் என்றும், ஆனால் கிரையம் பூர்த்தியானால் அந்த சமயத்தில் பணம் தருவேன் என் ஆசை வார்த்தை கூறி அழைத்தேன் என்றால் சரியல்ல. குருசாமி தேவரும், அவரது மகன்களும் எவ்வளவோ ஆட்சேபணை தெரிவித்தும் வலுக்கட்டாயமாக நான் தான் கட்டாயப்படுத்தினேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு

தபசில் சொத்தைப் பொருத்து உரிமை இல்லாததால்தான் கிரையம் முடிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மை விவரத்தை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குருசாமி தேவரும், அவரது மகன்களும், ஒப்பந்தத்தில் உள்ளவாறு பணம் ஏதும் என்னிடமிருந்து பெறவில்லை என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளுக்கும் இந்த கிரைய ஒப்பந்தத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி நான் சொல்லக்கூடிய விவரம் 3, 4 பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை பற்றி விவரம் தெரியும் என்றால் சரிதான். 31.07.2020ம் தேதிய கிரைய ஒப்பந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சட்டப்படி செல்லாத கிரைய ஒப்பந்த ஆவணத்தின் படி நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்ததற்கு வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு பிரதிவாதிகளின் செலவுத் தொலகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.